

# பெரிய ஊறணி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன சபை

பெரிய ஊறணி,
மட்டக்களப்பு.

26.11.1995 ........ 198..

பெரிய ஊறணி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய

<u>உப-விதி, விதி ஒன்று</u>

பிரிவு (அ) ஆலய நிர்வாக சபையின் தேர்வை மகா சபையினர் நடத்த வேண்டும். மகாசபையின் தீர்மானத்தின் முடிவே இறுதி முடிவாக அமையும்.

மகாசபையின் கோட்பாட்டுக்கு இணங்க குறிப்பிட்ட எல்லைக்குள் உட்பட்ட வட்டாரத்தில் பிறப்பால் வருகின்ற வர் அல்லது பிறப்பால் வாழ்கின்ற பெண்கள் விவாகம் செய்வோர் ஆலயத்தில் அங்கம் வகிக்கும் தகுதியுடைய ராவர். 18 வயது ஆண், பெண் இருபாலாரும் வாக்குரிமை யளிக்கும் தகுதியுடையவராக கருதப்படுவர்.

முக்கிய மூன்று பதவிகளை வகிப்போர் ஓரளவு கல்வித் தகைமையும், சமயப்பற்றும் நல்ல குண இயல்பு களையும், ஆலயத்தை சிறந்த முறையில் பரிபாலிக்கும் தன்மை கொண்டவராய் இருத்தல் விரும்பத்தக்கது. இவ் இயல்புகளைக் கொண்டுள்ளோர் முன் அங்கம் வகிக்கத் தகுதியுடையவராவர்.

பிரிவு (ஆ) செயலாற்றும் திறன் அற்றவராகக் காணப்படும் இடத்து நிர்வாக சபை உறுப்பினரின் பெரும்பான்மை வாக்குடன் பதவி நீக்கம் செய்ய தலைவருக்கு அதிகாரமுண்டு (விதி ஒன்று, பிரிவு (அ) அமைய).

ஆலய நிர்வாக சபைக்கூட்டம் மாகசபை கூடியதன் பின்னர் 15 (பதினைந்து) நாட்களுக்குள் கூட்டப்படும். மூன்று தடவை இரு மாதங்களுக்கு ஒர் முறை கூடவேண் டும். அவசியம் ஏற்படும்போது இரண்டு விசேட கூட்டங் களை அமைக்கலாம். இக்காலங்களுக்குள்.

உ

# பெரிய ஊறணி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன சபை

பெரிய ஊறணி,
மட்டக்களப்பு.

26. 11. 1985



(க2) ஆலயக் கணக்குகள் யாவற்றையும் மகாசபையினர் பார்வையிட்ட பின்னர் ஏகமனதான தீர்ப்பு வழங்கல் வேண்டும்.

(க3) மகா சபையினர் வரவு செலவுக் கணக்கை அங்கீகரித்த பின்னர் நிர்வாகசபை கலைக்கப்படல் வேண்டும். மீண்டும் புதிய நிர்வாகத்தை மகாசபையினரே தேர்ந்தெடுப்பர். (விதி ஒன்று பிரிவு (அ) அமைய)

(க4) புதிய நிர்வாகசபையை மகாசபையினர் தெரிவு செய்யும்போது உ.அ.அதிபர் அல்லது அவரின் பி/ பிரதிநிதி ஒருவரின் முன்னிலையில் தேர்வை நடாத்துதல் வேண்டும்.

(க5) பொருளாளர் மகாசபையின் முன் சமர்ப்பித்த கணக்குப் பதிவேட்டை ஆலயக் கணக்காய்வாளர் மீளாய்வு செய்யும் அதிகாரத்தைப் பெற்றவர் ஆவர். இவர்கள் (விதி02 பிரிவு க1) அமைய 14 நாட்களுக்குள் நடாத்தி சான்றிதழ் வழங்கல் அவசியமாகும்.

(க6) பொருளாளரின் கையிருப்பில் 500ரூபா தவிர ஏனைய பணத்தை ஆலய வங்கிக் கணக்கில் வைப்புச் செய்ய வேண்டும். (விதி02-பிரிவு க5) அமைய 03 நாட்களுக்குள் இடம்பெற வேண்டும்.

## விதி மூன்று

பிரிவு (இ) ஆலயத்தின் பொறுப்பு வாய்ந்த செயலாற்று கருமங்களை தலைவரின் அங்கீகாரத்துடன் செயற்படுத்தல் நன்று. ஆலய எழுது மடலில் முக்கிய பதவிகளை வகிக்கும் மூவரின் கையெழுத்துப் பிரதியே செல்லுபடியாகும். ஆலய எழுது மடலை சொந்தத் தேவைகட்கு உபயோகப்படுத்தல் குற்றச் செயலாகும்.

பிரிவு (ஈ) ஆலய வருடாந்த உற்சவத்தின் போது மூவர் கொண்ட செயற்குழுவை அமைத்தல் விரும்பத்தக்க செயலாகக் கருதப்படுகிறது. இதில் அங்கம் வகிப்போர் நிர்வாக சபையில் இடம் மற்றையவர் பொதுமகனாக இருத்தல் அவசியமாகும்.

## விதி நான்கு

பிரிவு (உ) நிர்வாக சபைக்கூட்டத்தில் விவாதிக்கும் விபரங்களை ஆலய நிரந்தரப் பதிவேட்டில் உள்ளடக்கம் செய்தல் நன்மை பயக்கும்.

பிரிவு (ஊ) நிர்வாக சபைக் கூட்டம் நடைபெறும் போது உறுப்பினர் எவரேனும்



# பெரிய ஊறணி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன சபை

பெரிய ஊறணி,
மட்டக்களப்பு.

26. 11. 1985.



கூட்டம் நடைபெறும் போது ஒழுங்கு முறையையும், நற்கொள் பரிபாலனத்தையும் கடைப்பிடித்தல் நன்று.

பிரிவு (எ) ஆலய சம்பந்தமான விடயங்களை மட்டுமே நிர்வாக சபைக்கூட்டத்தில் விவாதிக்கப்படல் வேண்டும்.

## விதி ஐந்து

பிரிவு (அ) நிர்வாகசபைக் கூட்டம் நடாத்தப்படும் திகதியில் உறுப்பினர்களுக்கு எழுத்து மூலம் ஏழு நாட்களுக்கு முன்னதாக அறிவித்தல் வேண்டும்.

பிரிவு (ஆ) நிர்வாக சபை எடுக்கும் முடிவிற்கு அமையவே ஆலய தலைமை பூசகர் நடந்து கொள்ள வேண்டும்.

## விதி ஆறு

பிரிவு (அ) பொது மக்களிடம் இருந்து பெறப்படும் ஆலய சம்பந்தமான கருத்துக்களை எழுத்து மூலம் பெற்று நிர்வாக சபைக் கூட்டறிக்கையில் சேர்க்கப்படல் வேண்டும்.

பிரிவு (ஆ) ஆலய விளம்பரப் பலகையில் நன்கொடை செய்வோரின் பெயர் போன்ற விபரங்களையும் வருடாந்த உற்சவம் செய்வோரின் பெயர் அல்லது தெரு போன்ற விபரக் கோவையையும் வரவு செலவுக் கணக்கறிக்கையும் இடம் பெறல் வேண்டும்.

பிரிவு (இ) ஆலயத்தின் பெயரால் ஊழல் மோசடி போன்ற குற்றச் செயலைச் செய்வோர் மீது ஆலய நிர்வாக சபையினர் தலையீடு செய்தல் அவசியமாகும்.

பிரிவு (ஈ) ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலத்திலும் பூசை நடைபெறும் நாட்களிலும் பூசை செய்வோரை உபயம் கொடுத்தும் காளாஞ்சிக் கொடுத்தும் கௌரவிக்க வேண்டும்.

பிரிவு (உ) விதி ஒன்று பிரிவு "ஆ" ன்படி/அமைய நிர்வாக சபையில் தலைவர் உப-தலைவர், காரியதரிசி, உப-காரியதரிசி, பொருளாளர், கணக்காய்வாளர் இருவர், போசகர் ஒருத்தருமாக பொதுசபையினரால் தெரிந்தெடுக்கப்பட்டு இதில் ஏனைய 09 அங்கத்தவர்களும் இடம் பெறுவர். மேலும் அதிகாரிகள் வேண்டுமாயின் தேவைக்கேற்று கூட்டிக் கொள்ளலாம்.

(பக்கம் 4 இல்)

# பெரிய ஊறணி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன சபை

பெரிய ஊறணி,
மட்டக்களப்பு.

26. 11. 1985



பிரிவு (ஜா) ஆலய வங்கிக் கணக்கில் இருக்கும் பணத்தை மீளப் பெறும்போது நிர்வாகசபையின் தலைவர், காரியதரிசி, பொருளாளர் அவர்களில் இருவரின் கையெழுத்தோடு உதவி அரசாங்க அதிபரின் கையெழுத்தும் இடம் பெறல் வேண்டும்.

............ ............ ............
தலைவர் காரியதரிசி பொருளாளர்

போசகர் ............................

Divisional Asst. Secretary,
Manmunai North, Bat...